Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,

திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.124/2020

Depositions of : PW 8 (LW11)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வம் | தொழில் | : | ஆட்டோ ஓட்டுனர் |
| தந்தை பெயர் | : | சிங்காரம் | முகவரி | : | எண்.7/2, சமயபுரத்தம்மன் கோவில் தெரு, திருவள்ளுவர் நகர், அம்பத்தூர். |
| வயது | : | 50 | மாவட்டம் | : | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of March - 2026.

(எதிரிகள் 1 முதல் 8 ஆஜர்.

முதல் விசாரணை=

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆட்டோ ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் பகுதியில் தான் வசித்து வருகிறார்கள். இன்றிலிருந்து சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 8.00 மணியளவில் சவாரி போய்விட்டு அம்பத்தூர் மார்க்கெட் வழியாக வந்த போது கூட்டமாக இருந்தது. போலிசார் இருந்தனர். நான் பக்கத்தில் போய் பார்த்த போது எங்கள் பகுதியை சேர்ந்த ஹரி என்பவர் இறந்து கிடந்தார். போலிசார் என்னிடம் ஒரு தாளில் கையொப்பத்தை வாங்கி கொண்டு அனுப்பிவிட்டனர். ஹரி எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. போலிசாரிடமும் மேற்கண்டவாறு தான் சொன்னேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத வேண்டி அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை=

போலிசார் விசாரணையில் ஏற்கனவே எங்கள் ஊரை சேர்ந்த மகிமைதாஸ், மணிவண்ணன், அசோக், நெப்போலியன், செந்தில், விஜி ஆகியோருக்கும் ஹரிக்கும் தகராறு இருந்து வந்தது என்றும், கடந்த 06.07.2019 அன்று இரவு அம்பத்தூர் மார்கெட்டில் உள்ள ஒயின் சாப்பில் ஹரியை வெட்டி கொலை செய்துவிட்டதாக தகவல் தெரிந்து நான் அங்கு போய் பார்த்தேன் என்றும் அப்போது ஹரி பலத்த வெட்டு காயத்துடன் ரத்தவெள்ளத்தில் இறந்துகிடந்தான் என்றும் மேற்கண்வர்கள் ரஞ்சித் குமார், டார்வின் ஆகியோருடன் சேர்ந்து கத்திகளால் ஹரியை வெட்டிகொலை செய்துள்ளனர் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.